மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 107/2013

பெயர் : வேலுச்சாமி
சாட்சி – பி.வா.சா–3 நாள்: 06.11.2025

---

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு இந்த வழக்கைத் தவிர வேறு ஏதும் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி கிட்டுசாமியின் மைத்துனர் தான் நான் என்றால் சரிதான். பெரிய மாரப்ப கவுண்டர் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தயார் செய்தது. பெரிய மாரப்ப கவுண்டருக்கு சொத்து பாகப்பிரிவினைப்படி பாத்தியப்பட்டிருந்தது என்று எனது அக்கா கணவர் சொல்லித் தெரியும். சொத்தினைப் பொறுத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும், கேள்விதான் பட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. பி.வா.சா.ஆ–1 கிரைய பத்திரத்தில் எனது அப்பா கையெழுத்து போட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் தெரியவந்தது. இந்த வழக்கினை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் மோகன்ராஜ் என்பவர் தாக்கல் செய்துள்ளார். மோகன்ராஜை எனக்கு எப்போது தெரியும் என்றால் இந்த நீதிமன்றத்திற்கு வந்த பின்னர் தான் தெரியும். எவ்வளவு காலமாக தெரியும் என்றால் 2 மாத காலமாகத் தான் தெரியும்.

3. நான் கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து நடராஜ் மகன் ரவிக்குமார் என்பவரிடம் இந்த நீதிமன்றத்திற்கு ஒவ்வொரு வாய்தாவிற்கும் வந்து செல்கிறேன் என்றால் எல்லா வாய்தாக்களுக்கும் வரவில்லை ஒரு சில வாய்தாக்களுக்கு வந்து சென்றேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான்.

4. 2ம் பிரதிவாதி எனது மைத்துனர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கடந்த 6 மாதங்களுக்கும் மேல் ஒவ்வொரு வாய்தாவிற்கும் நீதிமன்றத்திற்கு

வந்து வழக்கை கவனித்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு ஆதரவாக சாட்சியமளிப்பதற்காகத்தான் என்னை தயார் செய்வதற்கு நீதிமன்றத்திற்கு அழைத்து வந்து சென்றார்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் எனது தகப்பனார் கையெழுத்து போட்டுள்ளதாக சொல்லும் கையெழுத்தின் பக்கத்தில் அவரது தந்தை பெயரோ, முகவரியோ எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

5. எனது தகப்பனாருக்கு சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. அது சம்பந்தமான ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. எனது அப்பாவின் கையெழுத்தை காண்பிக்கும் விதமாக ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது அப்பாவினுடைய கையெழுத்தே கிடையாது என்றால் சரியல்ல.

6. எனது முதல் விசாரணையில் வாதிகள் ஒண்டிப்புதூர் மற்றும் ராசிபாளையம் கிராமத்தில் வசித்து வருகிறார்கள் என்பது எனக்கு எப்போதிலிருந்து தெரியும் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் சொன்னார்கள் எனக்கு நேரடியாக தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையெழுத்து போட்டுள்ளது சம்பந்தமாக எனது அப்பா என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். எப்போது சொன்னார் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் அது சம்பந்தமாக பேசிக் கொண்டிருந்தபோது என்னிடம் சொன்னார்.

7. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து பற்றி எனது அப்பா என்னிடம் சொன்னார் என்ற விவரத்தை எனது முதல் விசாரணை சொல்லி உள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பெரிய மரப்ப கவுண்டர் யாருடைய மகன் என்றும், அவருக்கு யாருடன் திருமணம் ஆனது, அவருடைய வாரிசுகள் யார் யார் என்பது குறித்த விவரங்கள் எனக்கு எதுவும் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

8. 1956 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தை நான் எப்போது படித்துப் பார்த்தேன் என்றால் கொஞ்ச நாட்களுக்கு முன்பாக பார்த்தேன். எனது நிரூபன வாக்குமூலத்தில் சொல்லி உள்ள பெரிய மரப்ப கவுண்டரின் சொத்துக்களை பற்றிய விபரம் சம்பந்தமான சங்கதிகள் 1956 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தை படித்து பார்த்து தான் நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

9. எனது மைத்துனரின் தந்தை பெயர் மாரப்ப கவுண்டர். எனது மைத்துனரின் அப்பா கருப்பண்ண கவுண்டர் மகன் மாரப்ப கவுண்டர் தாவா புல எண்ணில் 78 ½ செண்ட் பூமியை கிரையம் பெற்ற ஆவணத்தை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தில் கிரையத் தொகையாக எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை நான் கவனிக்க வில்லை. மேற்படி சொத்தினை மாரப்ப கவுண்டர் விற்றுவிட்டார் என்றால் சரிதான். அந்த விற்பனை செய்யப்பட்ட ஆவணத்தை நான் பார்த்ததில்லை.

10. எனது மைத்துனருக்கு அதே கிராமத்தில் வேறு புல எண்ணில் சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். அந்த புல எண் என்ன என்று எனக்கு தெரியாது. அந்த சொத்தினை எனது மைத்துணரும், அவரது சகோதரர்களும் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் 4, 5 பங்காளிகள் இருந்ததால் பிரித்துக் கொண்டார்கள். பெரிய மாரப்ப கவுண்டரை எனக்கு நேரடியாக தெரியாது. பெரிய மாரப்ப கவுண்டர் வேலாயுதம்பாளையம் கிராமத்தில் வசித்து வந்தார் என்பதும், அவருக்கு அவரது மகன்கள் தேவையான உதவிகளை செய்தார்கள் என்றும் சொல்லியுள்ளது எனக்கு நேரடியாக தெரியாது கேள்விதான் பட்டுள்ளேன்.

11. தாவா சொத்து சம்பந்தமான வருவாய் ஆவணங்களை இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் பார்த்தேன். வழக்கிற்கு முன்பு என்ன நடைபெற்றது என்ற விவரம் எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் குறுக்கு விசாரணையில் பெரும்பாலும் கேள்விப்பட்டதாக சொல்லிவிட்ட சங்கதிகளை எனது முதல் விசாரணையில் நான் நேரடியாக தெரிந்தது போல் சொல்லி உள்ளதால் எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

12. 2ம் பிரதிவாதி எனது மைத்துனர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிப்பதற்காக நான் தயார்படுத்தப்பட்டு வழக்கு விபரம் எதுவும் தெரியாமலேயே நான் சாட்சி அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தந்தை சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை என்றும், அவ்வாறு போட்டிருந்தால் எனது தந்தையின் கையெழுத்து அடங்கிய ஆவணத்தையும் சேர்த்து தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல.

13. தாவா சொத்தில் பிரதிவாதிகள் பழைய வீட்டை இடித்து விட்டு வீடு கட்டி உள்ளார்கள் என்று சொல்லி உள்ளது எந்த காலையில் அமைந்துள்ளது என்றால்

எனக்கு தெரியாது. அந்த வீடு ஊருக்குள் உள்ள வீடு என்றால் சரிதான். எனது மைத்துனரின் தந்தைக்கு வேலாயுதம்பாளையம் கிராமம் தான் பூர்வீகம் என்றால் சரிதான். எனது மைத்துனரின் தந்தைக்கு வேலாயுதம்பாளையம் கிராமத்தில் உள்ள பூர்வீக வீடு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எனது மைத்துனரின் தந்தையின் பூர்வீக வீட்டை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும், நான் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.06 18:42:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.